**செய்தி வெளியீடு எண் : 1346** **நாள் : 10.07.2023**

# செய்தி வெளியீடு

**தமிழ்நாட்டில் தென்னை விவசாயிகளின் நலன் காக்க, நடப்புப் பருவத்தில் கொப்பரைக் கொள்முதல் உச்சவரம்பை உயர்த்திடவும், தமிழ்நாட்டிற்கான கொள்முதல் இலக்கை உயர்த்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தென்னை விவசாயிகளின் நலன் கருதி, நடப்புப் பருவத்தில் கொப்பரைக் கொள்முதல் செய்வதற்கான உச்சவரம்பை 20 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தவும், தமிழ்நாட்டிற்கான கொள்முதல் இலக்கை 90,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு இன்று (10-7-2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் கொப்பரைக் கொள்முதல் தொடர்பான ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமரின் கவனத்தை ஈர்க்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசின் ஆதரவு விலை திட்டத்தின்கீழ், கொப்பரை கொள்முதல் செய்யும் இலக்கை அதிகரிக்க மாநிலம் முழுவதும் உள்ள தென்னை விவசாயிகளிடமிருந்து எண்ணற்ற கோரிக்கைகள் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசின் ஆதரவு விலை திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்யவும், சந்தை விலையை நிலைப்படுத்தவும், உளுந்து, பாசிப்பயறு மற்றும் கொப்பரை போன்ற பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன என்றும், தமிழ்நாட்டில், இந்தக் கொள்முதல் ஒன்றிய அரசின் அமைப்பான, தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் லிமிடெட் (National Agricultural Co-operative Marketing Federation of India Ltd.) மூலம் செய்யப்படுகிறது என்றும் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 4.46 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 53,518 இலட்சம் எண்ணெய் வித்துக்களும், ஒரு ஹெக்டேருக்கு 11,692 எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டு, பரப்பளவிலும், உற்பத்தியிலும் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும், தென்னை உற்பத்தியில் தேசிய அளவில் இரண்டாவது இடத்திலும் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கொப்பரை கொள்முதல் தொடங்கப்பட்டாலும், சந்தை விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விட அதிகமாக இருந்ததால், தொடக்க காலங்களில் கொள்முதல் குறைவாகவே இருந்தது என்றும், 2022 முதல், தேங்காய் உற்பத்தி அதிகரித்ததால் இந்த நிலை முழுவதுமாக மாறியது என்றும் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதன் விளைவாக, தேங்காய் சந்தை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500 - லிருந்து ரூ.1,500 - ஆகவும், கொப்பரையின் சந்தை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.11,500 - லிருந்து ரூ.8,100 - ஆகக் குறைந்ததனால், 2022 மற்றும் நடப்பாண்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கொப்பரை கொள்முதல் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆதரவு விலை திட்டத்தின்கீழ், நடப்பாண்டில், 2023 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாத காலத்திற்குள், 56,000 மெட்ரிக் டன் என்ற இலக்கில் 47,513 மெட்ரிக் டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளிடம் இன்னும் கொப்பரை கையிருப்பு அதிகமாக இருப்பதாலும், சந்தை விலை தொடர்ந்து குறைவாக இருப்பதாலும், ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கொப்பரையின் அளவை அதிகரிக்குமாறு மாநிலம் முழுவதும் உள்ள தென்னை விவசாயிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, நடப்பு பருவத்தில் செப்டம்பர் 2023 வரை கொப்பரை கொள்முதல் செய்வதற்கான உச்சவரம்பை, தற்போதுள்ள 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தவும், தமிழகத்திற்கான கொள்முதல் இலக்கை 56,000 மெட்ரிக் டன்னில் இருந்து 90,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தவும், தொடர்புடைய அமைச்சகத்திற்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், இது கொப்பரையின் சந்தை விலையை நிலைப்படுத்த உதவுவதோடு, மாநிலத்தில் உள்ள தென்னை விவசாயிகளுக்கும் நல்ல பயனளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**Text of the D.O. Letter dated 10-7-2023 of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to the Hon'ble Prime Minister of India Thiru. Narendra Modi with regard to procurement of Copra.**

I wish to invite your kind attention to an important issue relating to copra procurement in Tamil Nadu. Innumerable requests have been received from the coconut growers across the State to increase the procurement target under the Price Support Scheme (PSS) of Government of India.

Under the Price Support Scheme of Government of India, commodities like red gram, green gram, black gram and copra are procured to ensure Minimum Support Price to the farmers and to stabilize the market prices. In Tamil Nadu, the PSS procurement is done by National Agricultural Cooperative Marketing Federation of India Ltd (NAFED), an organisation of Government of India.

Tamil Nadu stands third in area and productivity and second in production of coconut at the national level with an area of 4.46 lakh hectare, production of 53,518 lakh nuts and productivity of 11,692 nuts per hectare.

Though copra procurement under PSS was initiated in the year 2019 in Tamil Nadu, the procurement was negligible during the initial years as the market prices were well above the MSP. However, from 2022 onwards, the trend reversed due to increased production of coconut. As a result, the market price of coconut declined from about Rs.2,500/- per quintal to Rs.1,500/- per quintal. Similarly, the market price of copra declined from nearly Rs.11,500/- per quintal to Rs.8,100/- per quintal. This has resulted in spike in the procurement of copra under PSS in the year 2022 and current year.

Under PSS, in the current year so far within a span of just three months from April to June 2023, 47,513 MT of copra has been procured against the target of 56,000 MT and still three months of procurement season i.e., July to September 2023 are remaining. As there are still huge stocks of copra available with farmers and the market prices continue to rule

low, several representations are received from the farmers across the State to increase the quantity of procurement under PSS.

**Hence, I request you to kindly issue necessary instructions to the concerned Ministry to enhance the quantity ceiling from the existing 25 per cent to 40 per cent for procurement of copra in the current season till September 2023 and also to increase the procurement target from 56,000 MT to 90,000 MT for the State of Tamil Nadu, which will help in stabilizing the market price of copra and thus will benefit the coconut growers in the State.**

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in